**O.S.No. 19/2022**

வா.சா.1, திருமதி.பகவதி, க/பெ..
நாள் : 07.02.2023 நேரம் : 12.36 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்–**

**குறுக்கு விசாரணை :–**

இருளாயி எனது தாயார் ஆவார். தகப்பனார் பெயர் கருத்தையாத்தேவர். எனது தாயாரின் உடன்பிறந்த சகோதரி பெயர் பாப்பாத்தியம்மாள் ஆகும். தாவா சொத்துக்கள் மற்றும் மொத்த சொத்துக்கள் எனது தாயாருக்கும், எனது சித்தி பாப்பாத்தியம்மாளுக்கும் 11.04.1974 மற்றும் 16.04.1974 ஆகிய தேதிகளில் கிரையம் பெற்ற கிரைய பத்திரங்கள் மூலம் பாத்தியமானது என்றால் சரிதான். எனது தாயாரும் எனது சித்தியும் மேற்படி கிரைய ஆவணம்மூலம் பெற்ற சொத்துக்களை சரிபாதியாக பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

2) அந்த வகையில் எனது தாயாருக்கு தாவா சொத்துக்கள் கிடைத்தது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது தாயாருக்கு பூர்வீகமானது பாத்தியப்பட்டது என்று காட்டுவதற்கு நான் எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வருங்காலங்களிலும் தாக்கல் செய்யமுடியாது. ஒத்தி பத்திரத்தில் பூர்வீக சொத்து என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

3) எனது தாயாருக்கும் தகப்பனாருக்கும் வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வேறு சொத்துக்கள் எனது தாயார் பெயரிலும் தகப்பனார் பெயரிலும் உள்ளது என்று சொன்னாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்களை மற்றும் வழக்கில் சேராத சொத்துக்களையும் எனது தாயாரும் அவரது வாரிசுகளும் 05.08.2012 ஆம் தேதி வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) சொத்துக்களை பாகம் பிரிக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. பாகம் பிரித்து 10 வருடம் ஆனதால் மறந்து போய்விட்டது என்றால் இல்லை. எனது தாயாருக்கு 1 முதல் 4 வாதிகள், 2ம் பிரதிவாதி மற்றும் முருகன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். 5 முதல் 9 வாதிகள் முருகனின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தாயார் 08.01.2014 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். பிராதில் எனது தாயார் இறப்பதற்கு முன்பாக ஒத்தி தொகை ரூ.80000– த்தை தயார் செய்து கொண்டு ஒத்தி பத்திரத்தை ரத்து செய்ய 1ம் பிரதிவாதியை அணுகியதாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

5) மேற்படி பாகத்தில் தாவா சொத்துக்கள் 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்திற்கு கிடைக்கப்பெற்றது என்றால் எனக்கு தெரியாது. நான் சுயநினைவோடுதான் இருக்கிறேன். 2ம் பிரதிவாதிக்கு பாகம் கிடைத்த தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு ரூ.3 லட்சத்திற்கு கிரையம் பேசிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய தொகையில் ஒத்தி தொகை ரூ.80000 போக மீதி கிரையத் தொகை ரூ.220000 த்தை 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்திடம் 1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் பெற்றுக்கொண்டு வாய்மொழி கிரையமாக தாவா சொத்தை கொடுத்துவிட்டார் என்றால் கொடுக்கவில்லை.

6) முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் ஒத்தி காலம் முடிந்த தேதி 15.07.2009 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒத்தி காலம் முடிவடைந்த தினத்திற்கு மறுநாளே 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி மேற்படி கிரையத்தை கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. பத்திர செலவை குறைக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரைய பத்திரமாக பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7) 1ம் பிரதிவாதி 16.07.2009 ஒத்தி காலம் முதல் சங்கை காலம் முடியும் வரையிலான தேதியான 15..07.2014 ஆம் தேதிவரை ஒத்திதாரர் என்ற வகையிலும் அதன்பின்பு இன்றைய தேதிவரை கிரையதாரர் என்ற வகையிலும் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால்

ஒத்திதாரராகதான் அனுபவித்து வருகிறார் கிரையதாரராக அனுபவித்து வரவில்லை.

8) ஏற்கனவே வாய்மொழியாக பாகம் பிரித்து கிரையம் கொடுத்துவிட்டதால்தான் 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கம் எங்களுடன் வழக்கு நடத்தவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்திடம் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக கூறினோம். எந்த தேதியில் எப்போது யார் முன்னிலையில் கூறினேன் என்று எனக்கு நினைவில் இல்லை. யாராவது ஒருநபர் இருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும் முதல் விசாரணை அபிடவிட்டிலும் 2ம் பிரதிவாதியிடம் நான் வழக்கை தாக்கல் செய்யப்போவதாக குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

9) 1ம் பிரதிவாதி கிரைய சொத்திற்கு அனாவசியமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகத்தான் 2ம் பிரதிவாதி எங்களுடன் சேர்ந்து வழக்கை நடத்த வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பட்டாவை மாற்றாமல் இருந்த ஒரே காரணத்திற்காக இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

10) 1ம் பிரதிவாதிக்கு எதிரிடை அனுபவம் என்ற முறையில் தாவா சொத்து கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி கிரைய பாத்தியத்தில்தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் நான் கூறுவதுபோல் ஒத்தி பாத்தியத்தில் அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் ஒத்தி தொகையை வைத்துக்கொண்டு எத்தனை முறை கேட்டேன் என்றால் இரண்டு மூன்று முறை கேட்டேன், யார் முன்னிலையில் எந்த தேதியில் கேட்டேன் என்றால் நானும் எனது கணவரும்கேட்டோம் ஆனால் தேதி ஞாபகம் இல்லை. பிராதில் கூறியதுபோல் 1ம் பிரதிவாதியை சந்தித்து ஒத்தி தொகையை கொடுக்க முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11) நான் ஒத்தி தொகைக்கு கணக்கிட்டுள்ள வட்டியும், அதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணமும் தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது பிராது தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.15 P.M

சாட்சியின் கையொப்பம்.